வடஆர்காடு மாவட்டத்தில் வேலூர், குடியாத்தம், வாணியம்பாடி, திருப்பத்தூர் ஆகிய தாலுக்காக்கள், செங்கல்பட்டு மாவட்டம் ஆகிய இடங்களில் குட்டை பச்சை வாழை பயிர் செய்யப்படுகிறது.

(இ) மாநில அரசின் கீழ் அந்த மாவட்டங்களில் குட்டை வாழை உற்பத்தியை அதிகரிக்க ஒரு தீவிர வாழை சாகுபடி திட்டம் ஏற்கனவே செயல்பட்டு வருகிறது. மத்திய அரசு திட்டங்களின் கீழ் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஏற்றுமதிக்கான பச்சை வாழை சாகுபடி செய்ய ஒரு திட்டம் செயல்பட்டு வருகிறது.

THIRU B. VENKATASWAMY: In the answer given by the Hon. Minister he has said that Robusta (pachai vazhai) is being introduced. At Hosur, this variety is coming up nicely. I have planted Robusta banana and it has come up nicely in my garden. So, may I know whether the Hon. Minister would extend the Central scheme to Dharmapuri district also.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்களே அதைச் செய்வது குறித்து நான் அவர்களைப் பாராட்டுகிறேன். அந்தத் திட்டம் செங்கற்பட்டு மாவட்டத்தில் மட்டும் தான் மத்திய அரசின் சார்பில் அமல்நடத்தப்படுகிறது. மேலும் இந்தத் திட்டத்தை விரிவு படுத்துவதற்குத் தற்சமயம் செயற்குறிப்பு இல்லை.

திரு. ஆ. பரந்தாமன்: குட்டை வாழையின் ஒரு பழத்தை ரூ. 2 கொடுத்து வாங்குவதற்கு ரஷ்ய நாட்டிலும், பாரிஸ் நகரத்திலும் கிராக்கி இருக்கிறதாக சொல்லப்படுகிறதே? ஆகவே, இதை ஏற்றுமதி செய்கின்ற அளவில் மேலும் பல இடங்களில் பயிரிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்பொழுது மத்திய அரசின் உதவியோடு செங்கற்பட்டு மாவட்டத்தில் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு 1,000 ஹெக்டார், 2,500 ஏக்கர் இப்பொழுது பயிர்செய்யப்பட்டு வருகிறது. இந்த வாழைக்கு மேலும் ஏற்றுமதிக்கு அதிக கிராக்கி இருக்குமானால் அதைப் பற்றிப் பரிசிலனை செய்யப்படும்.

திரு. ஏ. எம். இராஜா: கோவை மாவட்டத்தில் இந்தப் பச்சைவாழை பயிரிடுவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்துகொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தப் பகுதியில் இருக்கும் மக்கள் இந்தப் பச்சை வாழையை அதிகம் விரும்புவதில்லை. ஆகவே, வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசு அங்கே உற்பத்தி ஆகும் வாழையை விலைக்கு வாங்குவதற்கு ஏற்பாடு செய்யுமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி ஒன்றும் யோசனை தற்சமயம் இல்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே இந்தத் திட்டம் மத்திய அரசின் சார்பில் எந்த அடிப்படையில் செங்கற்பட்டு மாவட்டத்தில் மாத்திரம் அமல்நடத்தப்படுகிறது? மற்ற மாவட்டங்களுக்கும் கொடுப்பதற்கு இந்த அரசு அவர்களைக் கேட்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்தச் செயல் திட்டம் 1,000 ஹெக்டாரில் கொடுக்கப்பட்டிருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டத்திற்கு மாத்திரம் கொடுப்பதற்கு ஆண்டு ஒன்றுக்கு 1,000 ஹெக்டார் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மத்திய அரசு இயந்திரத் தெளிப்பான் வாங்க 50 சதவிகிதம் மானியமும், பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் வாங்க 50 சதவிகித மானியமும் வழங்குகிறது. மற்றைய செலவுகளைத் தமிழக அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இது வெற்றிகரமாக நடைபெற்றால், பிறகு மற்ற மாவட்டங்களிலும் அதைப் பயிரிடுவதற்கு ஏற்பாடு செய்வதற்கு இந்த அரசு மத்திய அரசை அணுகும்.

திரு. அ. ஆறுமுகம் : குட்டை வாழை சேலம் மாவட்டத்தில் வேலூர், மோகனூர் ஆகிய பகுதிகளில் பயிரிடப்படுகிறது. ஆகவே, அங்கேயும் அந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்சமயம் இல்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா : வாழை திருநெல்வேலி மாவட்டத்திலும் அதிகம் பயிரிடப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்திற்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : திருநெல்வேலி மாவட்டத்தில் 1969-70-ல் 4,818 ஏக்கர் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. 1970-71-ல் 5,250 ஏக்கர் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. 1971-72-ல் எனக்கு இன்னும் கணக்கு வரவில்லை. கூட்டுறவுத் துறைமூலம் கடன் வசதி அளிக்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு ரூ. 1,000 வீதம் நிலங்களுக்குத் தேவையான உரம் முதலானவற்றை வாங்க கடனுதவி அளிக்கப்படுகிறது. டெமான்ஸ்ட்ரேஷன் பிளாட், திருபணங்கள் பண்ணைகள் அமைப்பதற்கு அரசு ஒரு ஏக்கருக்கு ரூ. 100 வீதம் மானியம் வழங்குகிறது. பயிரிடும் முறைபற்றி அவர்களுக்கு இலவசமாகச் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. வாழையை நோயிலிருந்து பாதுகாக்க பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் அங்கே வழங்கப்படுகின்றன.

TRUTH ALONE TRIUMPHS